Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு
EELA NADU

மலர் 7 இதழ் 131

National Tamil Daily தேசிய தினசரி

(22-6-65)

விசுவாவசு ஆனி 8 ஸபர் பிறை 21 செவ்வாய்க்கிழமை

## நடக்குமா?

லண்டன், ஜூன் 21

ஆசிய - ஆபிரிக்க உச்சி மகாநாடு முன்னேற்பாட்டின் படி இம்மாதம் 29-ந் திகதி அல்ஜியர்ஸில் நடைபெறுமா? நடைபெறாதா? இதுதான் இப்பொழுது பல நாட்டுத் தலைவர்களையும் எதிர்நோக்கியுள்ள பிரச்னை அல்ஜீரியாவில் புரட்சி நடைபெற்று அங்கு உள்நாட்டு நெருக்கடியும் அதிகரித்திருப்பதால் இப்பொழுது அங்கு செல்வது நல்லதல்ல என்று பிலிப்பைன்ஸ், பர்மா, உள்ளிட்ட சில நாடுகள் முடிவு செய்துள்ளன. ஜப்பானியப் பிரதிநிதிகள் கோஷ்டி தனது விஜயத்தை ஒத்திவைத்துள்ளது கானா அதிபர் நிக்ருமா இதுபற்றி கடுமையாகச் சிந்தித்து வருகின்றார் இதவுடன் வேறு பல நாடுகளும் ஆலோசனை நடத்தி வருகின்றன. லண்டனில் தற்பொழுதுள்ள ஆசிய - ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் இது குறித்து இன்னும் முடிவு காணவில்லை

இப்பிரயாண நெருக்கடியில், அல்ஜியர்ஸில் மகாநாடு நடைபெறுவது சாத்தியமாக விருக்காதென்றும் அப்படி நடைபெற்றாலும் எல்லா நாடுகளும் கலந்துகொள்ள மாட்டாது என்றும் அதுநல்ல வெற்றியை அளிக்காது என்றும் லண்டனில் கூறப்படுகிறது. இதற்கிடையில் அல்ஜியர்ஸில் பென்பெல்லா ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன,

## நடக்காதா?

சுன்னாகம்

# மின்சார நிலையம் விஸ்தரிக்கப்படும்

## சிமெந்து ஆலை உற்பத்திக்கு உதவ தீவிர நடவடிக்கை

### புதிய இயந்திரங்கள் விரைவில் நிறுவப்படும்

கொழும்பு, திங்கள்

காங்கேசன் சிமெந்து ஆலையின் இரண்டாவது சூளை வேலைகளை, ஆரம்பிப்பதற்கு தேவையான மின்சாரத்தை விநியோகிக்க அரசாங்க மின்சார இலாகா சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இவ்வேலையை ஆரம்பிக்க ஐயாயிரம் கில்லோ வாட் மின்சாரம் தேவையெனவும் இந்த உடனடித்தேவையைப் பூர்த்திசெய்ய மின்சார இலாகா நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அறியப்படுகிறது.

காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் அமைக்கப்பட்டுவரும் இரண்டாவது சூளையில் உற்பத்தியை ஆரம்பிக்க ஐயாயிரம் கில்லோ வாட் மின்சாரம் உடனடியாகத் தேவைப்படுகிறது இதைத் தொடர்ந்து சுன்னாகத்தில் உள்ள மத்திய மின்சார நிலையத்துக்கு மின்சக்தி இயந்திரங்களை அனுப்புவதில் மின்சார இலாகா தீவிர கவனம் செலுத்திவருகிறது புறக்கோட்டை மின்சார நிலையத்தில் இயங்கிவந்த மூன்று இயந்திரங்கள் அங்கிருந்து அகற்றப்பட்டு, சுன்னாகம் மின்சார நிலையத்துக்கு அனுப்புவதற்கு ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன, இந்த மூன்று இயந்திரங்கள் ஒவ்வொன்றும் தனா 2000 கிலோவாட் மின்சக்தியை உற்பத்திசெய்யக்கூடிய டீசல் இயந்திரங்களாகும். இம்மூன்றிலிருந்து கிடைக்கும் மேலதிக 1000 கிலோவாட்டுகளும் வடமாகாணத்திற்குத் தேவையான சிறு கைத்தொழில், வீட்டுத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

## இரு மந்திரிகள் யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

அடுத்த மாதத்தில் இரண்டு மந்திரிகள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருக்கின்றனர்,

கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லே அடுத்த மாதம் 10-ந் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வார் என்றும் பொதுமராமத்துப்பகுதி மந்திரி திரு. மொண்டேகு ஜயவிக்கிரமா அடுத்தமாத நடுப்பகுதியில் இங்கு விஜயம் செய்வார் என்றும் நம்பப்படுகிறது.

வடமாகாணத்தின் வீதிகளைப் பார்வையிட்டு இப்பகுதிகளில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை ஆராய்வதில் மந்திரி மொண்டேகு ஜயவிக்கிரமா கவனம் செலுத்துவார். கல்வி மந்திரி இங்குள்ள பாடசாலைகளுக்கு விஜயம் செய்வார் என்றும் பாடசாலைக் கட்டிடங்கள், ஆசிரியர்கள் பற்றாக்குறை குறித்து அவர் ஆராய்வார் என்றும் தெரியவருகிறது.

வியட்னாம் சமாதானக் குழு:

## சூடு பேச்சு

### காமன்வெல்த் மகாநாடு வட்டாரங்கள் கவலை

லண்டன், ஜூன் 21

வியட்னாம் சம்பந்தமான சமாதானக்குழு முயற்சியை சீன பிரதமர் திரு. சூ-என்-லாய் கண்டித்திருப்பது குறித்து காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டு வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

வியட்னாம் பிரச்னைக்கு ஒரு சமாதானத் தீர்வு காண்பதில் முயற்சி மேற்கொண்டிருக்கும் பொழுது அதற்கு முட்டுக்கட்டையாக சீனப்பிரதமர் இருப்பது வருந்தத்தக்க விஷயம் என்று மகாநாட்டு வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

சமாதானக் குழுவைக் கண்டித்து வடக்கு வியட்னாம் கம்யூனிஸப் பத்திரிகைகள் இன்று செய்திகள் வெளியிட்டிருக்கின்றன.

சமாதானக்குழு சம்பந்தப்பட்ட எல்லா தலைநகரங்களுக்கும் செல்லுமென்று வரவேற்பைப்பற்றி அக்கறை கொள்ளாது [illegible] [illegible] செய்திகள் [illegible]

## அரசாங்க பார்லிமெண்டரிக் குழு

கொழும்பு, திங்கள்

போயா தினங்களை விடுமுறை நாட்களாக்குவது சம்பந்தமாக அரசாங்க பார்லிமெண்டரிக்குழு அடுத்த மாதம் 5-ந் திகதி வரும்போது ஆராயும் அன்றையக் கூட்டத்தில் வாழ்க்கைச் செலவைக் குறைப்பது சம்பந்தமான பிரச்னை முற்றாக ஆராய் [illegible] தெரிவிக்கப்படுகிறது

## "தங்களைத் தாங்களே தமிழர் ஆளும் காலம் வருகிறது"

### திருமலை வரவேற்பில் மந்திரி திருச்செல்வம்

திருமலை, திங்கள்

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விரைவில் 'தமிழ்மொழி ஆட்சிமொழியாக் கப்படும். மாவட்டசபை வாயிலாக தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆளுகின்ற அதிகாரங்களைப் பெற முடியும்.'

திருக்கோணமலை நகரசபையால் தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஸ்தலஸ்தாபன மந்திரிக்கும் அளிக்கப்பட்ட பொதுவரவேற்பிற்குப் பதிலளித்துப் பேசும்போது ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் மேற்கண்டவாறு கூறினர்

நகரசபைத்தலைவர் டாக்டர் சி. சிவானந்தம் தலைமையில் நடைபெற்ற இவ்வரவேற்பு விழாவில் மந்திரி திருச்செல்வம் மேலும் கூறியதாவது-

தமிழரசுக்கட்சித் தலைவர்கள் சத்தியாக்கிரகம் நடத்திய போதும் சிறைசென்றபோதும் மூலைமுடுக்குகளிலும், நீதிமன்றங்களிலும் அடங்கிக் கிடந்த தலைவர்கள், இன்று தமிழரசுக் கட்சி உரிமைபெற முயலுகின்ற சமயத்தில் அதனைக் குழப்புவதே தமிழருக்கு செய்யும் தொண்டெனக் கருதுவது கவலைப்படக் கூடியது.

தமிழினத்தின் சார்பில் திரு செல்வநாயகத்தின் கட்டளைப்படியே நான் தேசிய அரசாங்கத்தில் அமைச்சராக இருக்கச் சம்மதித்தேன்.

தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசும்போது கூறியதாவது-

நாங்கள் இந்த நாட்டிற்கு இணைப்பாட்சியே சிறந்ததெனக் கண்டோம். அதனைப்பெற இயன்றவரை நீதியான முறையில், நேர்மையான வழியில் பாடுபட்டு வருகிறோம். கடந்த 9 வருட காலமாக நாங்கள் நடத்திய போராட்டத்தின் பயனாகவுமே இன்றுள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரை பேசும்போது 'தமிழரசுக்கட்சி ஆரம்பித்த காலப் முதல் திருக்கோணமலை அதன் கோட்டையாக இருந்து வருகிறதென்றும் தமிழரசுக்கட்சியை உடைத்து சிதைக்கலாமென கனவுகண்டவர்கள் இன்று புகழ்பாடத் தொடங்கியுள்ளார்கள்' என்று கூறினர்.

கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசும்போது கூறியதாவது-

இந்நாட்டில் தமிழர்கள் உரிமைபெற்று வாழ்வார்களேயன்றி பிறரை இரங்கி பின்கதவால் சென்று புகழ்ந்தோ சலுகை பெற்றோ வாழமாட்டார்கள் என்பதை கடந்த இரு தேர்தல்களிலும் அதிகமான

(6-ம் பக்கம் பார்க்க

## கல்வி நிர்வாகத்தை பகிர்ந்தளிக்க கோரிக்கை

கொழும்பு, திங்கள்

கல்வி நிர்வாகத்தில் அரசாங்க ஏகாதிபத்தியமும் முழுக்க முழுக்க தேசியமயம் என்ற மனப்பான்மையும் அரசாங்கத்துக்கு இருக்கக் கூடாதென அகில இலங்கை ஆசிரியர் சங்கம் அரசாங்கத்தைக் கோரியுள்ளது. கல்வி நிர்வாகத்தில் சுதந்திரம் இருக்கக் கூடியதாக தேசிய கல்வித் திட்டத்தை தயாரிக்க வேண்டுமெனவும் அந்த மகஜரில் சங்கம் தெரிவித்துள்ளது.

தேசிய கல்வித்திட்டம் சுதந்திரமானவகையில் அமையமுடிற்படியாக பாலர் கீழ்ப்பிரிவு தொடக்கம் எட்டாம் வகுப்பு வரையுள்ள அடிப்படைப் பாடசாலைகளை உள்ளூராட்சி சபைகள் நடத்தக் கூடியதாக வழிவகை செய்யலாம் எனவும் சங்கம் சிபார்சு செய்துள்ளது.

இவ்விதம் செய்தால் பின்வரும் நன்மைகளை அடையலாம் எனசங்கம் குறிப்பிட்டுக்காட்டியுள்ளது.

- ○ கல்வி சம்பந்தமாக மத்திய அரசாங்கம் செலவுசெய்யும் நிதிப்பளு குறையும்,
- ○ கல்வி நிர்வாகத்தை பரந்த அடிப்படையில் பகிர்ந்தளித்தல,
- ○ கல்வி நிர்வாகத்திலுள்ள அரசியல் கட்டுப்பாட்டையும் தலையீட்டையும் தவிர்க்க முடியும்,
- ○ பாடசாலைகளுக்கு அவ்வூர் மக்களின் ஆதரவைப்பெறமுடியும்.
- ○ ஆசிரியர்களின் சுதந்திரத்தை நிலைநாட்டுவதுடன் அவர்களுக்கு அரசியல் உரிமையும் கிடைக்கும்.

உள்ளூர் வசதிக்கேற்ப கல்வித்திட்டங்களை அமைக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிந்தனைக்கு

ஒரு மனிதனுக்கு உலக மெல்லாம் பல்வேறு பொருட்களாகத் தோன்றும், பக்தனுக்கு உலகம் கடவுளின் சிருஷ்டியாகத் தெரியும். ஆனால் ஒரு ஞானியோ உலகத்தைக் கடவுளாகவே காண்பார்.

— சுவாமிசிவானந்தர்


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Pox 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana.
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு
ஆனி மீ 8 உ. (22-6-65)


## மந்திரியின் நல்ல யோசனை

தமிழ்பேசும் மக்கள் மத்தியில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையை நீக்குவதற்கு கடற்றொழிலில் ஈடுபட வேண்டுமென்றும் கடற்றொழிலில் பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்கவும் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருக்கோணமலை ஆகிய இடங்களில் மீன்பிடித் துறைமுகங்களை திறக்கலாமென்றும் இதற்கு இப்பகுதிகளிலுள்ள ஸ்தலஸ்தாபன சபைகள் முன்வர வேண்டுமென்றும் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் ஒரு நல்ல யோசனை தெரிவித்திருக்கிறார்.

இலங்கை கடலால் சூழப்பட்ட தீவு. எனினும் கடற்றொழில் விருத்தி செய்யாத காரணத்தினால் வெளிநாடுகளிலிருந்து மீன்களை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. இலங்கையின் மீன்பிடித் தொழிலில் யாழ்ப்பாணப்பகுதியில் மட்டும் முப்பது சதவிகிதமானோர் ஈடுபட்டிருந்தனர். ஆனால் சமீபத்தில் வீசிய சூறாவளியினால் இவர்களில் பலர் கடலுக்குப் பலியானார்கள். இதனால் நாட்டுக்குத் தேவையான மீனுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பெருமளவில் மீன் இறக்குமதி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் நேர்ந்துள்ளது. மீன்பிடி வள்ளங்களும் வலைகளும் சூறாவளியில் நாசமாகின மேலும் கடற்றொழிலில் மற்றவர்களுக்கு போதிய பயிற்சியளிக்க வசதி எதுவுமில்லை. தொழிலில் உயர்வு தாழ்வு இல்லையென்ற மனப்பான்மை இப்பொழுது தமிழ்பேசும் சமூகத்தில் சிறிது சிறிதாக வளர்ந்து வருகிறது. ஆனால் தொழில்களில் ஈடுபட விரும்பும் இளைஞர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான வாய்ப்பு மிகமிகக் குறைவு. இந்நிலையில் கடற்றொழிலில் பயிற்சியளிக்கவும் இத்தொழிலை விருத்தி செய்ய மீன்பிடித் துறைமுகங்களை நிறுவவும் ஸ்தலஸ்தாபன சபைகள் முன்வர வேண்டுமென்று மந்திரி திருச்செல்வம் தமிழ்ப்பேசும் பகுதிகளிலுள்ள ஸ்தலஸ்தாபனசபைகளின் சமாஜ மகாநாட்டில் யோசனை கூறியிருக்கிறார். இந்த யோசனையை இப்பகுதிகளிலுள்ள ஒன்றிரண்டு முக்கிய ஸ்தலஸ்தாபன சபைகளாவது கவனத்திலெடுத்து செயலில் வழிகாட்ட வேண்டும். இந்த யோசனையைச் செயல்படுத்துவதன் மூலம் தமிழ்ப்பகுதி ஸ்தலஸ்தாபன சபைகள் அரசாங்கத்தை எதிர்பார்த்துக்கொண்டிராமல் தமது பிரதேசங்களை பொருளாதாரத்தில் விருத்தி செய்ய வாய்ப்பு ஏற்படும்; ஓரளவு சுயநிர்ணய உரிமையையும் நிலைநாட்டிக் கொள்ளவும் வழிபிறக்கும். மீன்பிடித் தொழிலில்மட்டுமல்லாது இதர தொழில்களின் விருத்தியிலும் தமிழ்ப்பகுதி ஸ்தலஸ்தாபன சபைகள் பிறரை எதிர்பார்க்காமல் கவனம் செலுத்தினால் தமிழ்பேசும் மக்கள் சுதந்திரமாகவும் வாழ முடியும். நாட்டின் செலாவணியும் மிச்சப்படும். எனினும் ஸ்தலஸ்தாபன சபைகள் தமது யோசனையைச் செயலில் நிறைவேற்றுவதற்கு அச்சபைகளின் வருமானத்தை அதிகரிக்கவும் மந்திரி தமது செல்வாக்கைப் பிரயோகித்து வழிவகை காட்ட வேண்டும். இயன்றவரையில் இத்தொழில் விருத்திக்கு வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் உதவிகளையும் ஸ்தலஸ்தாபனசபைகளுக்கு அவர் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

## வடமராட்சியில சுகாதாரவிழா

பருத்தித்துறை, திங்கள்

வடமராட்சிப்பகுதி சுகாதார வாரக்கொண்டாட்டம் நாளைய தினம் அல்வாய் முத்துமாரியம்மன் கோவில் முன்றிலில் கொடியேற்றுவிழாவுடன் ஆரம்பமாகவிருக்கிறது.

நகர, பட்டின, கிராமசபைகளில் இருந்து மாட்டுவண்டிகளில் கொண்டுவரப்படும் சுகாதாரவாரச் செய்திகளை ஆலய முன்றிலில் வைத்து உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பெற்றுக்கொண்டு சௌக்கியக்கொடியை ஏற்றி வைப்பார்.

அன்றைய தினத்திலிருந்து முறையே புலோலி மெதடிஸ்த பாடசாலை, சிதம்பராக் கல்லூரி, திருஇருதயக் கல்லூரி, சித்திவிநாயகர் பாடசாலை, செம்பியன்பற்று, அல்வாய் மெ. மி. பாடசாலை ஆகிய இடங்களில் சுகாதாரக் கதம்ப விழாக்கள் நடைபெறும் எனவும் சுகாதாரவார விழாக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

கண்காட்சிகள், ஆசிரியர் சுகாதாரக் கலந்துரையாடல், சிரமதான இயக்கங்கள், ஊர்வலங்கள், விரிவுரைகள் முதலியனவும் இடம்பெறவிருக்கின்றன. இம்மாதம் 26-ம் திகதியன்று கரணவாய் தாமோதர வித்தியாசாலையில் சுயரோக தினக் கொண்டாட்டமும் நடைபெற விருப்பதாய் தெரியவருகிறது.

## சேவைக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், திங்கள்

"வித்தியாதரிசிகள் பாடசாலைக் கல்வி வளர்ச்சிக்கு இன்றியமையாதவர்கள். வித்தியாதரிசிகளும், ஆசிரியர்களும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். வித்தியாதரிசிகள் எசமானர்களாக இருந்த காலம் மாறிவிட்டது. யாழ்ப்பாண வட்டாரத்தில் தான் பாடசாலைகளைப் பற்றியோ, ஆசிரியர்களைப் பற்றியோ கல்விப் பகுதிக்கு வரும் பெட்டிசக் குறைவாகும், இதற்குக் காரணம் வித்தியாதரிசி திரு. அரசனின் திறமையான நிர்வாகமேயாகும்."

இவ்வாறு யாழ்ப்பாணத்திலிருந்து மாற்றலாகிச் செல்லும் வித்தியாதரிசகர் திரு. வி. அரசனுக்கு யாழ்ப்பாண வட்டார ஆசிரியர் சங்கத்தால் அளிக்கப்பட்ட பிரியாவிடை வைபவத்தின்போது தலைமை வகித்துப்பேசிய வடபிரதேச உதவி வித்தியாதிபதி திரு. என். தணிகாசலம் குறிப்பிட்டார்.

# பிறமதங்களை மதிக்கும் மனப்பான்மை வளரவேண்டும்

## சர்வசமய மகாநாட்டில் சுவாமி பிரேமாத்மானந்தஜி

வெள்ளவத்தை, திங்கள்

"வெகுதுரிதமாக முன்னேறி வரும் இந்த உலகத்தில், வேற்றுமையில் ஒற்றுமைகாணமுயல்வது சாலச்சிறந்ததாகும், மற்ற மதங்களை மதிக்கும் உள்ளப்பாங்கை நாம் எம்மிடையே வளர்த்துக் கொள்ள வேண்டும்".

இவ்வாறு நேற்றைய தினம் புதிய நகரமண்டபத்தில் கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா தலைமையில் நடைபெற்ற சர்வசமய மகாநாட்டில் இந்துசமயப்பிரதிநிதியாகக்கலந்துகொண்ட சுவாமி பிரேமாத்மானந்தஜி குறிப்பிட்டார்.

நகரமண்டபத்துக்கு உள்ளேயும் புறத்தேயும் கூட்டம் நிரம்பியிருந்தது. பல்வேறு சமயங்களையும் சேர்ந்த சமயத்தலைவர்கள் சொற்பெருக்காற்றினர்கள். பௌத்த சமயத்தின் முப்பெரும் பிரிவின் வணக்கத்துக்குரியமகாநாயக்க தேரோக்களும் கத்தோலிக்க மதத்தின் சார்பாக அதி சங்கைக்குரிய தோமஸ் கார்டினல் கூரேயும் சங்கைக்குரிய கொழும்புப் பகுதி பிஷப்பும் இந்து மதத்தின் பிரதிநிதியாக சுவாமி பிரேமாத்மானந்த ஜீயும்கலந்து கொண்டனர். இஸ்லாம் மதத்தின்சார்பாக சேர், ரஸீக் பரீத்தும் டாக்டர் எம் ஸி எம் கலீலும் ஸொரூஸ்ரியன் மதத்தின் பிரதிநிதியாக திரு. ஆர். ரஸ்டம்ஜீயும் பங்கு எடுத்துக் கொண்டனர்.

கொழும்பு இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சுவாமி பிரேமாத்மானந்தஜீ பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"இலங்கையின் இன்றைய சூழ்நிலையில் பல்வேறு மதங்களுக்குமிடையில் ஒற்றுமையை நிலைநாட்டுவது மிகவும் அவசியமான செயலாகும், இவ்வியக்கத்தில் சிறுபூசல்கள் புகாமல் காப்பாற்றுவது எமது கடமையாகும், எல்லா மதங்களும் உண்மை என்ற கொள்கையினை இந்துமதம் ஏற்றுக்கொள்கிறது. நாயன்மார்கள், ஆழ்வார்கள், விவேகானந்தர் போன்றோர் இப்பெருண்மையைத் தமது வாழ்க்கை மூலம் உணர்த்தியுள்ளனர். இந்துமதம் சகிப்புத் தன்மையையும் எல்லா மதத்தையும் ஏற்றுக் கொள்ளும் பரந்த இயல்பினையும் கொண்டது. வெவ்வேறு இடங்களிலே உற்பத்தியாகும் ஆறுகள் ஈற்றிலே கடலிலேசேர்வதுபோல்: பல்வேறு இயல்பின் காரணமாக வேறுபட்ட வழிகளைக் கடைப்பிடிக்கும் மனிதர்கள் இறுதியில் கடவுளையே அடைகிறார்கள். எவராயினும் எந்த வடிவத்திலும் என்னிடம் வந்தால் நான் அவனை அடைகிறேன். என்றும் எல்லா மக்களும் இறுதியில் என்னை அடைவதற்காக முயல்கிறார்கள் என்றும் ஸ்ரீ கிருஷ்ண பகவத் கீதையில கூறியுள்ளார். பல ரிஷிகள் இந்துமதத்தை வளர்க்க அரும்பாடுபட்டார்கள். பூரண நிலைமையினை அடைவதே இந்து மதத்தின் முக்கிய குறிக்கோளாகும். இறப்பில் இருந்து விடுதலை பெற்று பரப்பிரம்ம நிலைமையினை எய்துவதே இந்து மதத்தில் மோக்கமாகும். அன்பாலும் ஒற்றுமையாலும் இறைவனுடன் நாம் இரண்டறக் கலக்கவேண்டும்."

இராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பேசுகையில், "இலங்கையில் ஏறத்தாழ ஒருகோடி மக்கள் வசிக்கிறார்கள், சமயம் அன்பையும் அகிம்சையையும் போதிக்கிறது. புத்த சமயம் இவ்வுலகத்தில் ஆரம்பமாகி 2500 வருடங்கள் ஆகின்றன, மக்களை நாகரிகமாகவும் பண்பாகவும் நடக்கச்செய்வதே மதத்தின் கொள்கையாகும். இந்நாட்டிலே பௌத்தர்கள் தான் பெரும்பான்மையாக வசிக்கி

(6-ம் பக்கம் பார்க்க)

# குருமரபு முறையில் கட்டுப்பாடு அவசியம்

## பிராமண குரு சங்க மகாநாட்டில் காரியாதிகாரி பேச்சு

யாழ்ப்பாணம், செவ்.

"பிற மதங்களைப்போன்று நமது இந்து மதத்துக்கு கட்டுப்பாடுகள் அதிகம் இல்லை, இதுவே எமக்கு பலவீனமாக உள்ளது. குருமரபு முறையில் எமக்குக்கட்டுப்பாடு உண்டாக வேண்டும். குருவுக்குரிய பதவியை வகிப்பவரின், பக்குவம், வயது, கல்வி ஆகியவைகளில் ஒரு தகுதி நிர்ணயத்தை அமைத்து அதனைச்செவ்வனேசெய்ய இச்சங்கத்தினர் உழைக்க வேண்டும்" என்று அகில பிராமண குரு சமூக சேவா சங்க விசேஷ மகாநாட்டின் இரண்டாம் நாள் பிற்பகல் நிகழ்ச்சிகளின்போது சோமாஸ்கந்தக் குருக்கள் அரங்கில் ஆரம்ப உரை நிகழ்த்துகையில் யாழ். மாவட்ட காரியாதிகாரி திரு. எஸ். சிவஞானம் பேசுகையில் குறிப்பிட்டார்.

பிற்பகல்நேர நிகழ்ச்சிகளின் போது நீர்கொழும்பைச் சேர்ந்த திரு. எஸ். சோமாஸ்கந்தன், சோ, இராமச்சந்திரக் குருக்கள், க. சாம்பசிவக்குருக்கள் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

இரண்டாம் நாள் மாலைநிகழ்ச்சிகள் முகாந்திரம் 'சதாசிவ ஐயர்' அரங்கில் நடைபெற்றது அரங்கை வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. [illegible] தலைமைதாங்கிய திரு. சர்வ கைலாசநாதக்குருக்கள் தமது தலைமையுரையில் 'பிராமணனின் மூலதனமே ஒழுக்கமாகும். ஒழுக்கமே ஜீவாதாரமானது. ஒழுக்கத்தில வாழவேண்டிய பிராமணர்கள் தூயஉள்ளமுடையவர்களாய் இருக்க வேண்டும்' எனக் குறிப்பிட்டார். திருவாளர்கள் எஸ். பு. சோமசேகரம், ச. அம்பிகைபாகன், கே. பி. ஹரன், ச. பஞ்சாட்சரசர்மா ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

கப்பித்தாவத்தை செல்வவிநாயகர் கோவிலில் 25 வருடங்களாக தொடர்ந்து பிரதம அர்ச்சகராக பணியாற்றிவரும் திரு. டா சண்முகரத்தினக் குருக்களுக்கு பாராட்டுப் பத்திரம் வழங்கப்பட்டது.

முதல்நாள் நிகழ்ச்சிகள் வித்துவான் கணேசையர் அரங்கில் நடைபெற்றது, இந்நிகழ்ச்சிகளுக்கு தலைமைவகித்த திரு. ச. கணபதிக்குருக்கள் பேசுகையில் 'அகில இலங்கை சைவக்குருக்கள் சபை, அகில பிராமண சபை என பிரிவுபட்டிருந்த எமது சமூகத்தவர் ஒரே இயக்கத்தின்கீழ் ஒன்றுசேர்ந்திருப்பதால், சைவசமய வளர்ச்சிக்கு உதவக்கூடிய சக்தி பிறந்துள்ளது' எனக் குறிப்பிட்டார். திருவாளர்கள் க. சொக்கலிங்கம், பொன் கைலைநாதக்குருக்கள், சீதாராமசாஸ்திரிகள் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

## ஐயாறன் எழுதுவது

பல மாதங்களுக்குப் பிறகு நல்லூர் சிவன் கோவிலுக்குச் சென்றேன். அதன் முன்றலிலும் பிரகாரத்திலும் பெரிய 'அஸ்பெஸ்டாஸ்' கொட்டகை போட்டுள்ளதுடன், குடி தண்ணீருக்கான குழாய் வசதிகளெல்லாம் செய்துள்ளனர். பல சைவ அன்பர்கள் உதவியுள்ளனராம். பார்க்க மகிழ்ச்சியாக இருந்தது.

சென்ற ஞாயிற்றுக் கிழமை மாலை அங்கு அகில இலங்கை பிராம்மண குருசேவா சங்க மகாநாட்டை, யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர், பெருமைனுர் ஆரம்பித்து வைக்கையில் நல்லதோர் யோசனை கூறினர். ஆங்காங்கே கோவில்களிலே வாரம் ஒருமுறையாவது கிராம மக்களெல்லாரும் கூடி கூட்டுப் பிரார்த்தனை நடத்த வேண்டுமென்றும், அது முடிந்ததும், கிராமத்தின் சமூக சமய தேவைகளைப்பற்றி கலந்து பேசி, அவற்றைப் பூர்த்தி செய்யத்தக்க முயற்சி எடுக்க வேண்டுமென்றும், கோவில் குருக்கள் மார்களுக்கு இதில் முக்கிய பங்கு இருக்க வேண்டுமென்றும் சொன்னர்.

எம் கோவில்களைப் பெரிதாகக் கட்டியுள்ளதன் நோக்கமே, ஊர் மக்களுக்குப் பூரணமாகப் பயன்பட வேண்டுமென்பதுதான். பல கோவில்களில் திருவிழாக் காலங்களில் மட்டுமே மக்கள் அதிகம் கூடுகிறார்கள். வெள்ளிக்கிழமை போன்ற விசேஷ நாட்களில் சுவாமி தரிசனம் செய்து விட்டுப் போய்விடுகின்றனர். மற்ற நாட்களில் கோவில்கள் காலி தான். ஊர் நன்மைகளைப் பற்றி கோவிலின் புனித சூழ்நிலையிலே மக்கள் கலந்து பேசலாம். கட்சி, கோஷ்டி முதலிய வேற்றுமைகளுக்கு இடம் கொடாமல், தெய்வத்தின் பெயரால், சமய தேவைகளைப்பற்றி ஆலோசித்து ஆவன செய்யலாம்.

உதாரணமாக ஆஸ்பத்திரிகளிலுள்ள சைவ நோயாளருக்கும், சிறைச்சாலையிலுள்ள சைவக் கைதிகளுக்கும் வாரத்தில் ஒருநாள் கோவில் பிரசாதங்களை அளித்தால், அவர்களுக்கு எவ்வளவோ மன ஆறுதல் ஏற்படுவதாக இருக்கும். ஊரிலே ஏழ்மையால் சங்கடப்படுபவர்களுக்கு கோவில் மூலம், உணவு, உடை முதலியன தர்மமாகக் கொடுக்கலாம். கோவில் மூலம் தெய்வத்தின் பெயரால் செய்யக் கூடிய நன்மைகள் பல உண்டு. தொட்டதற்கெல்லாம் நாம் அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்ப்பது சரியாகாது.

இதற்கான முறையில் கோவில் குருக்கள் மார்களின் ஒத்துழைப்பை ஊர்மக்கள் பெற்று பணி ஆற்றுவதாயின், ஒவ்வொரு ஊருக்கும், ஆங்காங்கேயுள்ள கோவில்கள், சமூக சேவைக்கான உயிர் நிலையங்களாக இருந்து மேலான தொண்டாற்ற முடியும்; இவ்வித சேவைகள் நடப்பின், மக்களும் அதிகமாக கோவில்களைநாடி வருவார்கள்.

• • •

கொழும்பு கப்பித்தாவத்தை செல்வவிநாயகர் கோவில் பிரதம குருவான ஷண்முகரத்தின சர்மாவுக்கு, இம்மகாநாட்டில் ஒரு உபசாரப் பத்திரம் வாசித்தளித்து மரியாதை செய்தனர்; சென்ற சுமார் 25 வருடகாலத்துக்கு மேல் அக் கோவிலில் அவர் பல சோதனைகளையும் விரத்துடன் சமாளித்து பணியாற்றி வருகின்றார். முதலில் சில புத்த பிக்குகள், அந்தக் கோவில் காணியை ஆக்கிரமித்து, கிளர்ச்சி செய்தனர். அங்கிருந்த தமிழரின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டது, 1958-ம் வருடக் கலகத்தின் போதும், அங்கு ஏற்பட்டிருந்த ஆபத்துகள் கொஞ்சமல்ல; அந்த விநாயகப் பெருமானின் திருவரு

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்ஸனின் சமாதானக்குழு யோசனைக்கு சூஎன்லாய் கண்டனம்!

## "தென்வியட்னுமில் அமெரிக்காவை நிலைபெறச் செய்ய முயற்சிக்கிருர்"

கெய்ரோ, ஜூன் 21

**வியட்னும் சம்பந்தமான சமாதான தூதுக்குழு முயற்சியை சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் வன்மையாகக் கண்டித்துள்ளார். தென்வியட்னுமில் அமெரிக்காவை நிலைபெறச் செய்ய பிரிட்டன் மேற்கொண்டுள்ள மற்றுமொரு திட்டமே இது என்று சீனப்பிரதமர் திரு. சூ-என்-லாய் இங்கு நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.**

தற்பொழுது ஐக்கிய அரபுக் குடியரசில் சுற்றுவிஜயம் செய்துவரும் சீனப்பிரதமர் நேற்று கெய்ரோவில் பொதுக் கூட்டமொன்றில் பேசினர். அப்பொழுதுதான் அவர் மேற்கண்ட விஷயத்தைக் கூறினர்.

"அமெரிக்காவை பிரிட்டன் பல தடவைகளில் ஆதரித்திருக்கின்றது. தென்வியட்னுமில் அமெரிக்காவை நிலைபெறச் செய்யும்மூலமாக பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்ஸன் வகுத்த மற்றுமொரு திட்டம் இதுவாகும். இதுதவிர வில்ஸனின் யோசனை விசேஷமானதாகஇல்லை" என்றும் சீனப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் அமெரிக்காவை ஆதரிக்கும் பிரிட்டன் தென்வியட்னுமில் அமெரிக்காவை நிலைபெறச் செய்ய இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டை உபயோகிக்கின்றது" என்றும் கூறினர்.

## தண்ணீர் திட்ட ஒத்துழைப்பு

கெய்ரோ, ஜூன் 21

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கும் ஐக்கிய அரபுக்குடியரசுக்குமிடையே தண்ணீர் திட்ட ஒத்துழைப்பு மேலும் அதிகரித்துள்ளது.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் நீர்ப்பாதுகாப்புசபைத் தலைவரும், ஐக்கிய அரபுக் குடியரசின் நீர்ப்பாசன இலாகா காரியதரிசியும் ஒரு உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர், தண்ணீர் தேக்கி வைத்தல், குடிநீர் சப்ளை,சாக்கடைத்திட்டம், நீர்ப்பாசனம், வீணுகும் தண்ணீரைப் பயன் படுத்தல் போன்ற பிரச்னைகள் சம்பந்தமாக இருநாடுகளிடையே ஒத்துழைப்பைப் பலப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

## சர்வதேச வர்த்தக பொருட்காட்சி

லிப்ஸிக், ஜூன் 21

ஜெர்மன் ஜனநாயகக்குடியரசில் லட்ஸிக் நகரில் செப்டம்பர் 5-ந் திகதி முதல் 12-ம் திகதிவரைநடைபெறும் சர்வதேச வர்த்தகப்பொருட் காட்சிக்கானஏற்பாடுகள் தீவிரமாக நடைபெறுகின்றன, இதுவரை இந்த வர்த்தகப்பொருட்காட்சியில் பங்குபற்ற 60 நாடுகளைச் சேர்ந்த 6,500 வியாபார நிலையங்கள் முன்வந்துள்ளன

80 நாடுகளிலிருந்து சுமார் 285,000 வர்த்தகர்களும், தொழில்நுட்ப நிபுணர்களும் பொருட்காட்சிக்கு விஜயம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இனத் துவேஷம் மதம் போலவாம்!

கேப்டவுன், ஜூன் 21

இன ஒதுக்கல் கொள்கையை தனது அரசாங்கம் மதம் போல பின்பற்றும் என்று தென்னுபிரிக்கா பிரதமர் டாக்டர் வெர்வூட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் அதிக பட்ச, நட்பும் ஒத்துழைப்பும் வேண்டும் என்றும் ஆனல் இன ஒதுக்கல் கொள்கையைக் கைவிட முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சம நீதி வழங்கும்

லண்டன், ஜூன் 23

இலங்கையின் புதிய அரசாங்கம் சாதிமத அரசியல் பாகுபாடின்றி எல்லா மக்களையும் சரி சமமாக பாவிக்கும் என்ற நம்பிக்கையை லண்டனிலுள்ள இலங்கையர்களிடம், நீதிமந்திரி திரு. விஜேமன்ன தெரிவித்தார்.

## குஜராத்தில் தங்கச் சுரங்கம்

ஆமதாபாத், ஜூன் 21

குஜராத்தில் தங்கச் சுரங்கங்களைக் கண்டு பிடிக்கும் சமத்தியக் கூறு இருப்பதாகக் கூறப்படுகிறது.

## "பலன்களைப் பகிர்ன்றன"

புதுடில்லி, ஜூன் 21

புதுடில்லியிலுள்ள சீனத் தூதரகத்திடம் இந்தியா நேற்று ஒப்படைத்த ஒரு குறிப்பில் காஷ்மீர் சம்பந்தமான சீனப்பாக். ஒப்பந்தம் சட்ட விரோதமானவென்று தெரிவித்துள்ளது.

இந்தியாமீது நடத்தும் ஆக்கிரமிப்புகளின் பலன்தான் சீனவும் பாகிஸ்தானும் பகிர்ந்[illegible] என்று அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வியட்னும் படையில் சீனர்கள் சேர்ந்தனர்

## அமெரிக்க விமானங்களைத் தாக்குவதில் ஈடுபடுகின்றனராம்

ஹனேய், ஜூன் 21

வடக்குவியட்னும் தொண்டர்படையில் சீனர்கள் சேர்ந்துள்ளனர் என்றும் அமெரிக்க விமானங்களைத் தாக்குவதில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் வடக்குவியட்னும் செய்தி ஏஜன்ஸி அறிவித்துள்ளது.

### மற்றுமொரு 'மிக்' அழிக்கப்பட்டது

வடக்குவியட்னுமில் நேற்று தாக்குதல்கள் நடத்திய அமெரிக்க விமானங்கள் வடக்கு வியட்னுமின் மிக்போர் விமானமொன்றைச் சுட்டுவீழ்த்தியது. இப்படியாக மூன்று மிக்போர் விமானங்களை நான்கு நாட்களில் அமெரிக்க விமானங்கள் சுட்டுவீழ்த்தியிருக்கின்றன. முன்னுவதாக சுட்டப்பட்ட மிக் விமானத்தில் ராக்கெட்டுகள் இருந்தன.

நேற்றைய அமெரிக்க தாக்குதல்களின்போது வடக்கு வியட்னுமிலுள்ள சில இராணுவ நிலைகளும் ஒரு பெட்ரோல் கிடங்கும் நாசமாகின தென்வியட்னுமில் டனங் விமானத் தளத்திலிருந்து தென் மேற்கே சில்மைல் தூரத்தில் வியட்காங் கொரில்லாக்கள் மீது அமெரிக்க தென்வியட்னும் விமானங்கள் தாக்குதல்கள் நடத்தின. சேதவிபரம் உடனடியாக அறிவிக்கப்படவில்லை. இப்பகுதியில் ஒரு 'பட்டாலி'யன் வியட்காங் கொரில்லாக்கள் இருக்கின்றனராம்.

# பென்பெல்லா ஆதரவாளர் ஆர்ப்பாட்டம்

## தேசியசட்டசபை தலைவரும் கைது செய்யப்பட்டார்

அல்ஜியர்ஸ், ஜூன் 21

அல்ஜியர்ஸில் நேற்று, முன்னுள் அதிபர் பென்பெல்லாவுக்கு ஆதரவு தெரிவித்து நூற்றுக்கணக்கான பேர் ஆர்ப்பாட்டம் செய்தனர், இவர்களில் அதிகமானவர்கள் மாணவர்களாக விருந்தனர்.

ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் சிறிது நேரத்தில் பொலிஸாரால் கலைக்கப்பட்டனர் என்றும் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது.

### தேசிய சட்டசபைத் தலைவர் கைது

கைது செய்யப்பட்ட முன்னுள் அதிபர் பென்பெல்லாவின் ஆதரவாளரான அல்ஜீரிய தேசிய சட்டசபைத் தலைவர் திரு. பென் அலா நேற்று கைது செய்யப்பட்டார். தற்பொழுது இவர் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

### பென்பெல்லா இருப்பிடம்

அல்ஜியர்ஸிலிருந்து சுமார் பத்துமைல் தூரத்திலுள்ள இராணுவ முகாமொன்றில் முன்னுள் அதிபர் பென்பெல்லா கைதியாக வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மீது நீதிமன்ற விசாரணைகள் நடைபெறுமென்றும் செய்திகள் கூறுகின்றன. ஆனல் அவர் உயிருடன் இருக்கிருரா என்பது குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை,

### புரட்சி சபை கூடியது

ஆட்சியைக் கைப்பற்றியுள்ள புரட்சிச் சபை நேற்று முதற் தடவையாகக் கூடியது. சிறையில் வைக்கப்பட்டிருக்கும் சகல அரசியல் கைதிகளையும் விடுவிப்பதென்று புரட்சிசபை தீர்மானித்துள்ளது.


### சீன ஆதரவு

புதிய அல்ஜீரிய அரசாங்கத்தை ஸிரியாவும் இந்தோனேஷியாவும் அங்கீகரித்துள்ளது: கம்யூனிஸ்ட் சீனு நிபந்தனையற்ற ஆதரவு தெரிவிப்பதாக அறிவித்துள்ளது.


### தூதுகோஷ்டிகள் வருகின்றனர்

இதற்கிடையில் இம் மாதம் 29-ம் திகதி இங்கு நடைபெறவிருக்கும் ஆசிய - ஆபிரிக்க உச்சி மகாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு பல நாடுகளினதும் தூதுகோஷ்டிகளும் இங்கு வர ஆரம்பித்

(5-ம் பக்கம் பார்க்க)



வானவெளியில் பறக்கும்போது எடை உணர்ச்சியில்லாமல் பறக்க உதவும் "ஸ்டுமிலேட்டர்" என்னும் சாதனத்தில் புதியதொரு வகையை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். எந்தப் பக்கமும் திரும்பக்கூடிய இந்த சாதனத்தில் அமெரிக்க ஆராய்ச்சி பொறியியலாளர் ஒருவர் பரிசோதனை நடத்துவதையே மேலேயுள்ள படத்தில் காண்கிறீர்கள்.



அமெரிக்காவின் முதல் ஜனதிபதியின் சொந்த ஊரில் உள்ள தேவாலயத்துக்கு ஜனதிபதி ஜோன்சன் அண்மையில் சென்றிருந்தார். ஜனதிபதியும், திருமதி ஜோன்சனும் தேவாலயத்தில் வழிபாடு நடத்திவிட்டுத் திரும்புகையில், அவரின் வருகையை எதிர்பார்த்திருந்த மூன்று குழந்தைகளுடன் கைகுலுக்கி மகிழ்வதை படத்தில் காணலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் மலர்



வெங்காயச் செய்கை

## மேடை போடுவதில் அதிக கவனம் வேண்டும்

— பொ. கனகநாயகம் —

முந்திய சில கட்டுரைகளில் நாம் வெங்காயச் செய்கை பற்றி ஆராய்ந்தோம். இது குறித்து மேலும் கவனிப்போம். விபரமாக, தெளிவாக நாம் விளங்கிக் கொண்டால் அது நல்ல பலனைக் கொடுக்குமல்லவா? கடந்த கட்டுரைத் தொடரிலிருந்து மேற்கொண்டு படியுங்கள்.

மெற்ஜு என்னும் நத்தை கொல்லி மருந்தை வாங்கி 1 ருத்தல் தவிட்டில் அரை அவுன்ஸ்விதம் மெற்ஜுவைக் கலந்து சிறிது உருண்டைகளாக்கி நத்தை வரும் வழிகளில் இரவு 9 மணி போல் வைத்தால் நத்தை அதை உண்டதும் உடன் இறந்துவிடும். ஆனால் "மெற்ஜு"வைக் கலக்கும் போது மிகக் கவனமாக இருக்கவேண்டும். இது நச்சுத் தன்மை உடையது. மிகுதியாகத் தவிட்டுக் குழையல் இருந்தால் அதைவிடியமுன் எடுத்துப் பத்திரப்படுத்தினல் மறுநாளும் உபயோகிக்கலாம். அல்லதுதேவை முடிந்தவுடன் கிடங்குவெட்டி அதனும் போட்டுப் புதைத்துவிடவேண்டும்.

பம்பாய் வெங்காய மேடை போடும் போது மேல்கூறிய சகலதையும் கவனத்தில் எடுக்க வேண்டும். இவ்வாறு மேடையில் கூடிய கவனம் எடுத்தால் நாம் நாட்டப்போகும் பம்பாய் வெங்காய நாற்று ஒருவித இடையூறும் இன்றி நல்லவிதமாக வளர்ச்சியுறும் என்பது திடம். பம்பாய் வெங்காயச் செய்கையில் உள்ள கஷ்டம் மேடைபோட்டு மேடையில் கன்றுகளை கோவின்றிப் பாதுகாப்பது தான். இவ்வாறு போதிய கவனம் எடுத்தால் நல்ல இலாபம் அடையலாமென்பதில் ஐயமில்லை.

இனி தரை பண்படுத்தும் முறையைப் பற்றிக் கவனிப்போம்.

நாம் மேடையில் நாட்டிய நாற்றுகளை நட வேண்டிருப்பதால் எப்படி அவற்றை நாட்ட வேண்டுமென்பதையும் அதற்கு நிலம் தயாரிக்கும் முறைபற்றியும் ஆராயவேண்டும்.

தரையை நன்கு பண்படுத்தி (உழவு செய்தோ அல்லது கொத்தி) அத்தரையின் மீது கூட்டெரு மாட்டெரு போட்டு நன்கு உழுது அல்லது கொத்தி பண்படுத்த வேண்டும். இவ்வாறு பண்படுத்தியதரையில் இச்செய்கை செய்யலாம். கடல் மட்டத்திலிருந்து 6000 அடி உயரம் வரையுள்ள இடங்களில் வெற்றிகரமாக செய்யலாம். பம்பாய் வெங்காயம் அதிக மழை வீழ்ச்சியைத் தாங்க மாட்டாதாகையால் 80 அங்குல மழை வீழ்ச்சிக் குட்பட்ட இடங்களில் நன்கு செய்கை பண்ணலாம்.

பண்படுத்தியவுடன் 8 அடி அகலமுள்ள மேடைகளாக அமைக்கவேண்டும். மேடைகளுக்கிடையே ஒரு அடி அகலமான ஆழமற்ற வடிகால்கள் விடவேண்டும். இவ்வடிகால்கள் மூலம் தண்ணீர் பாய்ச்சலாம். பயிர் நாட்டமுன் கூடியளவு மாட்டெருவும் கூட்டெருவும் போடவேண்டும், அத்துடன் ஒரு ஏக்கருக்குக் கீழ்க்காணும் முறையில் செயற்கைப் பசளையும் போடவேண்டும்.

முக்கால் அந்தர் அடசப்பர் பொஸ்பேற்.

அரை அந்தர் பொற்ருசியம் மியூரியேற்.

அரை அந்தர் அமோனியம் ஸல்பேற்.

இவ்வாறு போட்டபின் மேடையில் தயார்செய்த கன்றுகளை 5 வாரத்தின்பின் கவனமாகப் பிடுங்கி 12 அங்குல இடைவெளியில் உள்ள நிரைகளில் 4 அங்குல இடைவெளி உள்ள நிலையங்களில் நாட்ட வேண்டும். நாட்டிய பயிர்களைப் பாதுகாப்பது எப்படி?

நாட்டிய பயிர்களுக்கு வேறு பிராணிகளால் இடையூறு வராதவகையில் கவனமெடுக்க வேண்டும். நோய் வராமல் பாதுகாக்க முன்கூட்டியே மருந்து தெளித்தல்வேண்டும். சின்ன வெங்காயத்திற்கு நீர்ப் பாய்ச்சுவதுபோலவே பம்பாய் வெங்காயத்திற்கும் நீர்ப்பாய்ச்சல் வேண்டும். பம்பாய் வெங்காயம் மூன்றரை மாதம் வந்தவுடன் அறுவடை செய்யலாம் அறுவடை செய்வதற்குப் 10 நாட்களுக்கு முன்பே தண்ணீர் கட்டுதலை நிறுத்தவேண்டும். பலகை ஒன்றினல் பம்பாய் வெங்காயத்தாள்களை அமத்திவிடவேண்டும் அறுவடை செய்தவுடன் தோட்டத்திலே 3 நாட்களுக்கு விட்டுத் தடல்களை உலரவிடவேண்டும் இப்படி நடைபெற்றபின் வெங்காயத்தின் தடல்களை வெட்டி ஈரமற்ற இடத்தில் பாதுகாத்து வைத்து விற்பனை செய்யலாம் மேடையில் இருக்கும்பொழுது இலைகளில் நுனி கருகல் கண்டவுடன் உடனடியாக 'பெற்றிஞெக்ஸ்' மருந்தை 5 கலன் தண்ணீருக்கு ஒரு அவுன்ஸ் விதம் கலந்து தெளிக்கவேண்டும்:

### பனிப்புழு நோய்

வெங்காயத் தடலில் உள்ள சாற்றை சில பூச்சிகள் உண்பதால் வெண்புள்ளிகள் தோன்றுவதைக் காணலாம் இதற்கு "டியல்றின்" 20 வீதம் அடர்த்தியுள்ள திராவகத்தை 3 கலன் நீரில் ஒரு அவுன்ஸ் வீதம் கலந்துதெளிக்கவேண்டும் தடல்களை உண்ணும் புழுக்கள்:- இந்நோய்க்கு 5 கலன் நீரில் ஒரு அவுன்ஸ் வீதம் கரைத்து தெளிக்கவேண்டும் இப்படியான விளைச்சலினல் லாபம் 2000 ரூபா முதல் 4000 ரூபா வரை கிடைக்கும்.

தொடர் நவீனம்

## ஆகாயக் கோட்டை

— க. கனகலிங்கம் —

பெண்ணுருப் பெற்ற தன் பாலை நாகசர்ப்பம் தன் தலைவியிடம் அழைத்துச்சென்றது. நாககன்னி அப்பெண் குழந்தைக்கு நாகநந்தினியெனப் பெயர்சூட்டி அன்புடன் வளர்த்துவரலானுள். நாகநந்தினி பொழுதொருவண்ணமும் நாளொருமேனியுமாக வளர்ந்துவரலானுள்.

ஒருநாள் நாகநந்தினி அரண்மனையைச் சுற்றிப்பார்க்க விழைந்தாள். தனது விருப்பத்தைச் செவிலித்தாயிடம் தெரிவித்தாள். ஆனல் அவள் பயங்கரமாகச் சத்தமிட்டு "நாகநந்தினி, இதுபோன்ற கேள்வியை நான் எக்காலத்தும் உன் வாயிலிருந்து பெறக்கூடாது ஜாக்கிரதை" என்று கடுமையாகப் பதிலளித்தாள். நாட்கள் வாரங்களாக மாறிக்கொண்டிருந்தன, அன்போடு அழைக்கும் நாககன்னி, நாளடைவில் கடுகடுப்பாகப் பழக ஆரம்பித்தாள். அத்துடன் அரண்மனையில் நடக்கும் ஒவ்வொரு செயலும் நாகநந்தினிக்குக் கிலியை உண்டாக்கிவந்தது. ஒவ்வொருநாள் காலையும் நித்திரைவிட்டெழும்பிப் பார்க்கும் பொழுதெல்லாம் ஒற்றைக் கண் குருடியும், நொண்டியும் தனது தாயிடம் வாக்குவாதப்படுவதையும், தன்னைக் கண்டதும் திடீரென விஷயத்தை வேறு திசையில் திருப்பிக் கதைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு இவ்விரு மனிதர்களும் சென்றுவிடுவதை அவதானித்துவந்தாள்.

இவ்விரு பயங்கர மனிதர்களும் ஏன் காலையில் வரவேண்டும்? வந்தவர்கள் ஏன் வாக்குவாதப் படவேண்டும்? தன்னைக் கண்டதும் ஏன் கதைக்குமுற்றுப்புள்ளிவைத்து விட்டுச் செல்லவேண்டும்? என்ற கேள்விகளுக்கு விடைகாணத் துடித்தது நாகநந்தினியின் உள்ளம்.

அன்றொருநாள் நட்டநடுநிசி, எங்கும் பயங்கர அமைதி நிலவியது. அரண்மனைவாசிகளை உறக்கம் உண்டு ஏப்பம்விட்டுக்கொண்டிருந்தது. இதுவே தருணம் என்றுணர்ந்த நாகநந்தினி தனது துயிலறையிலிருந்து வெளியேறி ஓசையெழாது அடிமேல் அடிவைத்து ஒருவாறு அரண்மனை வாயிலைக் கடந்தாள், முதலில் குருட்டுக் கிழவியினதும், நொண்டியினதும் மர்மத்தை அறியச் சித்தங்கொண்டவளாய் அதிகாலையில் தன் செவிலித்தாயிடம் சண்டையிட்டுவிட்டுச் செல்லும் திசையை நோக்கி நடக்கலானுள். சிறிதுதூரம் சென்றதும் மலர்களின் நறுமணம் வீசத்தொடங்கியது. நாகநந்தினி தனது குறிக்கோளை மறந்து நறுமணம் வந்த திசையை நோக்கி நடக்கலானுள். சிறிதுதூரம் சென்றதும் ஓர் அழகிய மலர்த் தோட்டத்தையும், தோட்டத்தின் மத்தியிலிருந்து சிரிப்பொலியும், அதனைத் தொடர்ந்து பாடல் எழுவதையும் அவதானித்தாள்.

(தொடரும்)

### கவலையோ கவலை

கவலைக்குக் கவலையில்லை—அக்
கவலைக்கு அழிவுமில்லை
கவலைக்கு உருவமில்லை—அக்
கவலைக்கு இரக்கமில்லை
கவலைக்குத் தொல்லையில்லை—
அக்
கவலைக்கு எல்லையில்லை
கவலைக்கு வறுமையில்லை—அக்
கவலைக்கு முடிவுமில்லை.

○

கவலைக்கு விலையுமில்லை—அக்
கவலையால் நலமுமில்லை
கவலைக்குத் தொலையுமில்லை—
அக்
கவலையால் பசியுமில்லை
கவலைக்கு கண்பசில்லை—அக்
கவலையால் கன்மையில்லை
கவலைக்குத் தாக்கமில்லை—அக்
[illegible]

[illegible] யோகரத்தினம்.

## இரு விருந்துகள்

இரண்டு புதிய (ஆனல் சிறிய) தொடர்கதைகள் இப்பகுதியில் உங்களுக்கு விருந்தளிக்கவிருக்கின்றன. கவலைக்கு மருந்தாகவும், சிந்தனைக்கு படைப்பாகவும், அறிவுக்கு விருந்தாகவும் வெளியாகவிருக்கும் இவ்விரு தொடர் கதைகளும் உங்களை மெய்சிலிர்க்க வைக்கும். படிக்கப் படிக்கத் தூண்டும் திடுக்கிடும் நிகழ்ச்சிகள், தெரிந்த விஷயங்கள், ஹாஸ்ய வெடிகள் எல்லாவற்றையும் உள்ளடக்கி இங்கு பவனி வரவிருக்கும் இரு சிறிய தொடர்கதைகளும் எப்படியானவை? அந்தக் கதைகளின் பெயர்கள் என்ன? என்ற விபரங்களை அடுத்த வாரம் இப்பகுதியில் நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

## சிரிக்காதீர்கள் சிந்தியுங்கள்

— சபா. புஷ்பநாதன் —

பர்னுட் ஷாவை உங்கள் எல்லோருக்கும் தெரியும் தானே? நந்த கிண்டல்காரர் என்றுலே அவரின் பெயர் ஞாபகத்துக்கு வரும். பர்னுட் ஷாவை கிண்டல்பண்ணி தோற்கடிக்க விரும்பிய ஒருவர் அவரை தன்வீட்டுக்கு விருந்துக்கு வருமாறு அழைத்தார்,

மறுநாள் விருந்தில் இரு கோப்பையில் பேரீச்சம்பழம் வைக்கப்பட்டிருந்தது. இருவரும் பேரீச்சம்பழங்களை ஒவ்வொன்ருக எடுத்துச் சாப்பிட்டனர். ஆனல் அவரை விருந்துக்கு அழைத்தவர் மட்டும் பழங்களை சாப்பிட்டு அதன் கொட்டைகளை பர்னட்ஷாவினது பேரீச்சம்பழ கோப்பையில் போட்டார். எனவே அவருடைய கோப்பையில் கொட்டை எதுவும் இல்லை. ஆனல் பர்னுட்ஷாவினது கோப்பையில் இருவரும் சாப்பிட்ட பழக்கொட்டைகள் இருந்தன. ஒரு கட்டத்தில் விருந்து வைத்தவரின் மனைவி மற்றும் நண்பர்களும் வந்து சேர்ந்துவிட்டனர். பர்னுட் ஷாவை அவமதிக்க இது நல்ல சந்தர்ப்பம் என நினைத்த அவர் பர்னுட்ஷாவை பார்த்து "என்ன ஷா மிச்சம் பசிபோல இருக்கிறதா?" என்று சிறுகிண்டல் செய்தார். அங்கிருந்தவர்கள் பர்னுட் ஷாவுக்கு முன்னுல் பேரீச்சம் பழக்கொட்டைகள் அதிகமாக இருந்ததனுல் உண்மையென நம்பி சிரித்தார்கள்.

ஆனல் பர்னுட் ஷா, தயக்கமில்லாமல் "என்னிலும் பார்க்க உங்களுக்கு மிச்சம் பசிபோல இருக்கிறதோ ஏனெனில் நீர் கொட்டைகளுடனே முழுவதையும் சாப்பிட்டுவிட்டீரே" என்றதும்; விருந்துக்கு அழைத்தவர் முகத்தில் கரிபூசிய உணர்ச்சியுடன் தலை கவிழ்ந்தார். சிரிக்காதீர்கள் சிந்தியுங்கள்.

### ஒளி

—பாலகிருஷ்ணன்—

எமக்கு இயற்கையொளியை தரும் பொருள்கள் சூரியனும் நட்சத்திரங்களுமாம். சூரியன் ஒரு பெரிய நெருப்புக் கோளம் அதைச் சுற்றியுள்ள பல வாயுப் பொருள்களும் பிரகாசமாய் எரிந்து கொண்டிருப்பதினுல் அது மிகவும் பிரகாசமாய் தெரிகிறது. சூரியன் பூமியை விட 13 00000 மடங்கு பெரியது. பூமியில் இருந்து 9,30,00000 மைல் தூரத்தில் உள்ளது. நட்சத்திரங்களுக்குச் சூரியனைப் போன்று சுய ஒளி உண்டு. அவை சூரியனை விட பன்மடங்கு பெரியன, ஆனல் சூரியனிலும் விட அதிக தூரத்தில் மிகவும் சிறியனவாகத் தோன்றுகிறது. சூரியனுடைய ஒளி பூமியை வந்தடைய எட்டு நிமிஷங்கள் செல்லும். ஆனல் நட்சத்திரங்களின் ஒளி பூமியை வந்தடைய ஏறக்குறைய மூன்று நான்கு வருடங்கள் செல்லும். சூரியன் நட்சத்திரங்களிலும் விட மிக அண்மையில் இருப்பதினுலேயே [illegible]டைய பிரகாசமான ஒளி நட்சத்திரங்களை பகல் நேரத்தில் தெரியாதவாறு மறைந்து விடுகின்றது.

### பொதுமேடை

"மாணவர் மலரில்" தொடர்ச்சியாக வெளியாகிவரும் பொ. கனகநாயகம் எழுதும் விவசாயக் கட்டுரைகள் எமக்கு பெரிதும் பயன்தருகின்றன. பம்பாய் வெங்காயத்தைப்பற்றி விரிவாக எழுதினுல் நன்ருக இருக்கும். "ஆகாயக் கோட்டை" பாராட்டத்தக்கது.

—க. கமலச்சந்திரன்
பெருந் தெரு,
திருக்கோணமலை.

(விவசாயக் கட்டுரைகளைப் பாராட்டி பலர் நன்றி தெரிவித்து எழுதியிருக்கின்றனர்.)

"ஞாபகத்துக்கு ஒரு பரீட்சை" தொடர் வரவேற்கத்தக்கது. "மூளைக்கு வேலை" பகுதியைத் தொடர்ந்து பிரசுரியுங்கள்,

—எஸ். விமலேஸ்வரி,
சண்டிக்குளி.

### சிரித்துமகிழ சில நிமிடங்கள்

ஒருவர் தூக்கமின்றி இரவு பூராவும் சிரமப்பட்டுக்கொண்டிருந்தார். டாக்டர் அவரைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு "நீர் இரவில் தூங்கும்வரை ஒன்று இரண்டு என்று எண்ணிக்கொண்டே போகவேண்டும்" என்று சொல்லிவிட்டுச் சென்ருர். மறுநாள் டக்டர் வந்து "நான் சொன்னபடி செய்தீர்களா?" என்று கேட்டார்.

"ஆமாம், செய்தேன். ஒரு லட்சத்து தொண்ணூருயிரத்து தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்துவரை எண்ணி முடித்தேன்".

"அப்புறம் தூங்கிவிட்டீர்களாக்கும்"

"அதுதானே இல்லை; இதற்குள் பொழுதுவிடிந்துவிட்டது!" என்ருர் நோயாளி!

●

'அம்மா, நாம் உயிர்வாழ்வது யாரால்?'

'குழந்தாய், அது கடவுளின் அருளால்'.

'நமக்குஉணவளிப்பவர் யாரம்மா?'

'கடவுளின் கருணையால்தான் நமக்கு உணவு கிடைக்கிறது'.

'என் தம்பி பாப்பாவும் கடவுளின் அருள் தானுஅம்மா?'

'சந்தேகம இல்லாமல்'.

"நாம் உயிரோடு வாழ எல்லாவசதிகளையும் கடவுள் அளிக்கிருரா அம்மா?"

"ஆமாம் கண்ணே!"

"அப்படியானுல் இந்தஅப்பா ஏன் வீணுக நம்வீட்டில் இருக்கிருர்? இவரைப் போகச் சொல்லி விடலாமா!"

"... ... !! — —"

குமார் தனபால்
நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயுர்வேதக் கல்லூரி பிரவேச விண்ணப்பம்

பம்பலப்பிட்டி, திங்கள்
கொழும்பு ஆயுர்வேதக்கல்லூரி மாணவர்பிரவேசத்திற்கு தற்பொழுது நடைமுறையில் இருக்கும் விதிகள் திருத்தப்பட்டு. திருத்தம் செய்யப்பட்ட விதிகளுக்குஅமைய 1965—66ம் ஆண்டிற்கான புது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 10-ம் தேதிக்கு முன்பாக அனுப்பப்படவேண்டும். மேலும் விபரங்கள் இம் மாதம் 18-ந் தேதி வர்த்தமானப் பத்திரிகையில் வெளியாகியுள்ளது.

## சீனாவிடமிருந்து புகையிரதபெட்டிகள்

கொழும்பு, திங்கள்
இலங்கை புகையிரதப் பகுதி சீனாவிடமிருந்து 116 புகையிரதப்பெட்டிகளை பெற்றுக்கொள்ளும். ஏற்கெனவே 238 பெட்டிகள் புகையிரதப் பகுதிக்குக் கிடைத்துள்ளன.

# சர்வதேசக் கூட்டுறவாளர் தின விழா 1965 யாழ்ப்பாணம்

## போட்டி விபரங்கள்

(திருத்தம்)

**நிகழ்ச்சிகள்** 17-7-65

**I. 60 மைல் ஸ்டான்டார்ட் சைக்கிள் பந்தயம்**

(அ) காலை 6-30 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகி, நாவாந்துறை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கொடிகாமம், பருத்தித்துறை, காங்கேசன்றுறை, தெல்லிப்பளை, சுன்னாகம், உடுவில் ஆகிய வீதிகள் வழியாகச் சென்று மானிப்பாய் இந்துக்கல்லூரியில் முடிவடையும்.
(ஆ) ஆண்கள் எவரும் பங்குபற்றலாம்.
(இ) முதல் ஐந்து இடங்களைப் பெறுபவர்களுக்கு கணிசமான பரிசில்கள் வழங்கப்படும்.

16-7-65

**II. போர்த்தேங்காய் அடித்தல் போட்டி**

(அ) காலை 9-00 மணி தொடக்கம் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.
(ஆ) தனிப்பட்ட எவரும் பங்குபற்றலாம்.
(இ) முதலாம், இரண்டாம் இடங்களைப் பெறுபவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

16-7-65—17-7 65

**III. 1-கயிறு இழுத்தல் போட்டி**

(அ) பிற்பகல் 3-30 மணி தொடக்கம் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.
(ஆ) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாசங்கள் மாத்திரம் பங்குபெறலாம்.
(இ) முதலாம், இரண்டாம் இடம் பெறும் கோஷ்டிகளுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

**2- விநோத உடைப்போட்டி** 17-7-65

(அ) மாலை 6 மணி தொடக்கம் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.
(ஆ) எவரும்பங்குபற்றலாம்.
(இ) முதல் ஐந்து இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

1965 ஆடி 10-ம் திகதியும் அதற்கு முன்னரும் பின்வரும் விலாசத்தில் விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்பும் முகவரி:-

டி. செல்லக்கண்டு
ஐக்கிய மாகாண வங்கி,
யாழ்ப்பாணம்.

## விண்ணப்பப்பத்திரம்

மானிப்பாயில் 1965-ம் வருடம் ஜூலை மாதம் 15ம் 16ம், 17ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் சர்வதேசக் கூட்டுறவாளர் தின விழாவில் பின்வரும் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கு என்னைத் தயவுசெய்து சேர்த்துக் கொள்ளுங்கள்.

எனது தகுதியையும் நான் அந்த நிகழ்ச்சியில் பங்குபற்றுவதன் விளைவாக எனக்கோ, என் சொத்துக்களுக்கோ ஏற்படக்கூடிய காயங்களுக்கும் சேதங்களுக்கும் நானுகவே பூரண பொறுப் பேற்றுக் கொள்கிறேனென்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதனை நடத்துபவர்களையும், அவர்களின் பிரதிநிதிகளையும் அல்லது நியமிக்கப்பட்ட எந்த அதிகாரிகளையும் அந்தப் பொறுப்பிலிருந்து விடுவிப்பதோடு சேதங்களுக்கோ, காயங்களுக்கோ அவர்களுக் கெதிராக எவ்வித கோரிக்கையையும் விடுக்க மாட்டேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

போட்டிப் பொறுப்பாளர்களின் நிகழ்ச்சியின் சகல விதிகளுக்கும் கீழ்ப்படிவேனென்பதையும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

நிகழ்ச்சி (தனித்தனி எழுத்தில்)

..............................................................

..............................................................

பெயர் (தனித்தனி எழுத்தில்)

..............................................................

..............................................................

முகவரி. ..............................................................
..............................................................
..............................................................

மேற்குறிப்பிட்டவைகளை நான் ஒப்புக் கொள்கின்றேன்.

..............................................................

போட்டியிடுபவரின் / ப. நோ. கூ. சங்கச் சமாசக் காரியதரிசியின் / கையொப்பம்.

திகதி ....................

# விளம்பரம்

## கேள்வி விளம்பரம்

### 12-ம் கட்டைப்பாதை ரோட்டமைப்பு

1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ந் திகதி காலை 10 மணி வரை பல்லவராயன்கட்டு கிராமசபை அக்கிராசனரால் ரூபா 10,000-00 மேல் பதியப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பிணைப்பணம் ரூபா 10-00. கேள்விப்பத்திர விலை ரூபா 1-00. 18-6-65 திகதி கி. ச. காரியாலயத்தில் சீல் வைத்த கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்கள் எதுவும் கி. ச. காரியாலயத்தில் அக்கிராசனரிடம் அறிந்துகொள்ளலாம்.

சி. முகம்மது
அப்துல்காதர்,
அக்கிராசனர்,
பல்லவராயன்கட்டுக்
கிராமசபை,

திகதி 16-6-65 432

## கேள்வி விளம்பரம்

### பரந்தன் கச்சல்கொடி சின்னடம்பன் ரோட்டு வேலை

1965-ம் ஆண்டு ஆனி மாதம் 30-ந் திகதி நண்பகல் 12 மணி வரை மேல்பற்று தெற்கு கிராமசபை அக்கிராசனரால் மேற்படி ரோட்டு வேலைக்கு பதிவு செய்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து சீல்வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பணமாக ரூபா 50-00 செலுத்தியதன்பேரில் வழங்கப்படும் பத்திரங்களில் கேள்வி தயாரிக்கப்படவேண்டும். பத்திரப்பணமாக ரூபா 25-00 ம் செலுத்தப்பட வேண்டும். இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. எனக்குப் பதிவுத் தபாலில் விண்ணப்பிக்கும் அதே நேரத்தில் வவுனியா உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களுக்கும் கேள்வியின் நகல்பிரதி பொன்று அனுப்பப்படவேண்டும். 29-6-65 நண்பகல் 12 மணி வரையும் பத்திரங்கள் வழங்கப்படும். விபரங்களை எனது அலுவலகத்திலும் வவுனியா உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திலும் தெரிந்துகொள்ளலாம்.

செ. சுப்பிரமணியம்,
கி. ச. அக்கிராசன , ஜே. பி;
கி. ச. அலுவலகம்
நயினாமடு, நெடுங்கேணி,
14-6-65 481

## தேவை

அரசாங்கப் பதிவுபெற்ற காப்பரேஷனில் பின்வரும் வேலைகள் காலியாக இருக்கின்றன.

(1) 10 விசேஷ தரமுடைய பெண் சேவாளர்.

(2) 20 சாதாரண சேவாளர்.

வேதனம்: மாதாந்தம், பொருத்த வேலைப்படி கொடுக்கப்படும். ரூபா 100க்கு மேல் உற்பத்தி செய்வோருக்கு 5வீத போனஸ்உம், ரூபா 150க்கு மேல் உற்பத்தி செய்வோருக்கு 7 1/2 வீத போனஸ்உம் மாதாந்தம் கொடுபடும். விசேஷ தர சேவாளருக்கு இதைவிட மாதாந்தம் ரூபா 10-00 அலவுன்ஸ் மேலதிகமாகக்கொடுபடும். இருசாராரும் தங்குவதற்கு இலவச இடவசதி அளிக்கப்படும். 29-6-65 திகதிக்கு முன்விண்ணப்பிக்கவும்:-

அதிபர்,
[illegible]
காப்பரேஷன்,
[illegible]

## கென்னடி கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம். செவ்வாய்
யாழ்ப்பாணம் மென்பந்தாட்டச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட மென்பந்தாட்ட இறுதிப் போட்டியில் 'யங்லயன்ஸ்' கோஷ்டியை கென்னடிகோஷ்டி 10 அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றிபெற்று கென்னடி கோஷ்டி இவ்வருட சாம்பியன் வெற்றிக் கிண்ணத்தை பெற்றுக்கொண்டது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### செவ்வாய் 22-6-65 கொழும்பு

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 சிறிலங்கா குறுக்கெழுத்துப்போட்டி, 7-00 வயலின், 7-30 மத்தாப்பு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 நேயர்விருப்பம், 9-45 நாதஸ்வரம்.

## பென்பெல்லா :..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளன. சீனத் தூதுகோஷ்டி நேற்று வந்து சேர்ந்தது. இந்தியக் கோஷ்டி இன்று வந்தது. அண்மையில் வெளிவிவகார மந்திரிகளினது கூட்டம் இங்கு நடைபெற விருப்பதால், பல நாடுகளையும் சேர்ந்த வெளிநாட்டு மந்திரிகள் இங்கு வருவதற்கு ஒழுங்குகள் செய்து கொண்டிருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கான் தலைமையில் பாக். கோஷ்டி இம் மகாநாட்டில் கலந்து கொள்ளும் பாகிஸ்தான் தூது கோஷ்டியில் வெளிவிவகார மந்திரி புட்டோவும் இருப்பார். இந்தியா, இலங்கை போன்ற நாடுகளும் இம் மகா நாட்டில் கலந்து கொள்ள சம்மதித்துள்ளன.

REGAL - JAFFNA
NOW SHOWING
Sterling Hayden
Yvonne de Carlo
in
SHOT GUN
(color)

## வரி விளம்பரம்

### தேவை

புடவை வியாபாரத்தில் அனுபவமுள்ள விற்பனையாளர், தையல்வேலையில் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. விபரத்திற்கு உடனடியாக வலிகாமம் வடக்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசக் காரியதரிசியோடு தொடர்பு கொள்ளவும். விண்ணப்பப்பத்திரத்தின் கடைசித் திகதி 30-6-65. விண்ணப்பதாரர் வலிவடக்கிலுள்ளவர்களாக இருக்க வேண்டும். 546

### விற்பனைக்கு

EL ஏழாயிரம் சீரிஸ் 'வக்சால் வைவேர்ன்' மிகவும் உன்னத நிலையிலுள்ளது. விற்பனைக்கிருக்கிறது. சங்கானை மார்க்கெட்டிலுள்ள 'ராஜா ஸ்டோரில் பார்வையிடலாம். 548

தொய்வு, சுசம், நீரழிவு, வெள்ளை முதலிய பல்கொடிய வியாதிகள் குணம்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோசர் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்றுயர்ந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், வைரவ பிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்

## மத்திய கல்லூரி வென்றது

யாழ்ப்பாணம், செ.உ.
யாழ்ப்பாணம் ஹொக்கிச்சங்கத்தினரால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்டுவரும் சுற்றுப் போட்டி யொன்று அண்மையில் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் யாழ் மத்திய கல்லூரியும், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயமும் கலந்துகொண்டன.

யாழ். மத்திய கல்லூரி 3—1 கோல்களால் வெற்றியீட்டியுள்ளது. கனகரத்தினம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த சிவதாஸ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஜெயரத்தினம் கணேஷ் ஆகியோர் திறமையாக விளையாடினர்கள். மத்தியஸ்தர்கள்: கே. பூபாலசிங்கம் கே. அரியர்சா.

யாழ்ப்பாணம், திங்கள்
கதிரிப்பாய் சுப்பிரமணிய சுவாமிகோவிலில் வழமைபோல் மணவாளக்கோல விழா கொண்டாடப்பட்டது. விசேஷ அபிஷேக ஆராதனையும் நடைபெற்றதோடு, முருகப்பெருமானின் வீதியுலாக் காட்சியும் இடம்பெற்றது.

கடைசி 4 தினங்களுக்கு மட்டும்
கிங்ஸ்லி
(கொழும்பு)
தினசரி 3-00, 6-00, 9-30
★ சிவாஜி கணேசன்
★ எஸ்.எஸ்.ஆர்., நாகேஷ்
★ விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
பச்சை விளக்கு
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-00, 9-30
டலரையோ
(சிங்களம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிய ஆபிரிக்க மகாநாடு

# பர்மா, பிலிப்பைன்ஸ் மகாநாட்டில் கலந்துகொள்ளாது

## வேறு சில நாடுகளும் மறுபரிசீலனை

அல்ஜியர்ஸ், ஜூன் 20

அல்ஜியர்ஸில் நடைபெறவிருக்கும் ஆசிய ஆபிரிக்க மகாநாட்டில் கலந்துகொள்வது பற்றி சில நாடுகள் இப்போது மறுபரிசீலனை செய்து வருவதாயும் பர்மாவும், பிலிப்பைன்சும் அதில் கலந்துகொள்ளும் திட்டத்தை ரத்துச் செய்து விட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

இந்தியத் தூதுகோஷ்டி, திட்டமிட்டபடி அல்ஜியர்ஸ் புறப்படும் என டில்லியில் அறிவிக்கப்பட்டது. மலேசியா தூதுகோஷ்டி ஏற்கனவே புறப்பட்டுவிட்டது.

அல்ஜீரியாவின் புதிய புரட்சி அரசாங்கம் முதலில் அங்கீகரிக்கப்படவேண்டும் என்றும், பின் அது சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு புதிதாக அழைப்பு அனுப்பப்படவேண்டும் என்றும் நைஜீரிய பிரதமர் சர் அபுபக்கர் தபாவா பலேவா கூறியிருக்கிறார்.

அல்ஜியர்ஸ் மகாநாடு திட்டமிட்டபடி வருகிற 29-ம் திகதி நடைபெறும் என்றும், ஒத்திவைக்கப்படமாட்டாதென்றும் ஐ. நா. வினுஅன அல்ஜியர்ஸ் பிரதிநிதி புதாண்டிடம் தெரிவித்திருக்கிறார். புதாண்ட மகாநாட்டின் ஆரம்பக்கட்டத்தில் கலந்துகொள்ளத் திட்டமிட்டிருந்தார்.

அல்ஜீரியா தன் சர்வதேச கடமைகளை நிலைவேற்றும் என்றும், அதன் மண்டல சார்பற்ற வெளிநாட்டுக்கொள்கை நீடிக்குமென்றும் புரட்சி சபை இந்திய அரசாங்கத்திற்கு குறிப்பொன்றை அனுப்பியிருக்கிறது

இதற்கிடையில் பதவியிலிருந்து தள்ளப்பட்ட ஜனாதிபதி பென்பெல்லா அல்ஜியர்ஸ் அருகிலுள்ள ஒரு ராணுவ முகாமில் காவலில் வைக்கப்பட்டிருப்பதாயும், அவர்மீது ராணுவ நீதிமன்ற விசாரணை நடத்தப்படும் என்றும் புரட்சி சபைத் தலைவர் கர்னல் பூமதியன் அறிவித்திருக்கிறார்.

பென்பெல்லாவையும், அவரது கூட்டத்தையும் மக்கள் ராணுவம் கட்டுப்படுத்திவிட்டதென்று புரட்சி சபை விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. பெல்லா மீது பல குற்றச்சாட்டுகளையும் அது சுமத்தியிருக்கிறது.

# "இலக்கியத்தில் சிறந்தது குழந்தை இலக்கியமே"

பருத்தித்துறை, ஞாயிறு

குழந்தை இலக்கியம் இலக்கியங்களுள் எல்லாம் தலையானது. ஒழுக்கத்தைப்போதிப்பனவாக அவை அமைய வேண்டும். குழந்தைகள் தான் எதிர்கால எஜமானர்கள். அவர்களது பிஞ்சு உள்ளங்களிலே பண்பு நல்லமுறையில் படைக்கப்பட வேண்டும். அந்த இலக்கியங்களை உருவாக்குவது, இலகுவான ஒரு காரியமல்ல. ஆழ்ந்த அனுபவமும் ஆற்றலும் இன்றியமையாது தேவையாகும்.

இவ்வாறு ஓளவை துரை நடராசா விக்னேஸ்வரக் கல்லூரியில் "குழந்தை இலக்கியம்" என்னும் பொருள்பற்றி உரையாற்றுகையில் கூறினார்.

அதிபர் திரு. வி சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. நடராசா தொடர்ந்து பேசுகையில் "கற்றதனால் ஆயபயன் என்கொல்" என்னும் முதலையுடைய குறளின் சிறப்புப்பற்றி எடுத்து விளக்கியதுடன் குழந்தை இலக்கியம் அவர்களது ஆற்றல்களையும் இயல்பூக்கங்களையும் வளர்க்க உதவும்முறையில் ஆக்கப்படவேண்டும் என்றார்.

## விசேஷ கூட்டம் கலைக்கப்பட்டது

சாவகச்சேரி, ஞாயிறு

நேற்றுக் காலை திரு. இ. ரா. சிவகுருவின் தலைமையில் கூடிய சாவகச்சேரி நகர சபை அங்கத்தவர்களின் விசேஷக் கூட்டம் 4-ம் வட்டார அங்கத்தவர் திரு. மு. விநாசித்தம்பி எழுப்பிய ஒழுங்கு பிரச்னை காரணமாக கலைக்கப்படவேண்டி நேர்ந்தது. கூட்ட நிகழ்ச்சிநிரலில் சென்றகூட்ட அறிக்கைக்கான கூட்டம் அழைக்கப்படாதது காரணமாகவே கூட்டம் கலைக்கப்பட்டது.

## யூகோ கைதிகளின் செய்தி

பெர்லின், ஜூன் 20

"22 ஆண்டுகளுக்கு முன்பு யூகோஸ்லேவியா யுத்தக்கைதிகளால் விட்டுச் சென்ற ஒரு செய்தி பெர்லின் நகரின் வடபகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டது. கடந்த யுத்தத்தின் போது ஹிட்லரால் சிறைப்பிடிக்கப்பட்ட யூகோ யுத்தக்கைதிகள் 6-4-1943-ம் திகதி இச்செய்தியை எழுதி ஒரு போத்தலில் போட்டு ஒரு அகழியில் புதைத்திருந்தனர். காவி அதிகாரிகளின் நிர்ப்பந்தத்தின் மீது அவர்கள் தோண்டியதே இந்த அகழி.

இந்த இடத்தில் கமம் செய்யும் எதிர்கால சந்ததியினர் இந்த மண் அடிமைகளாக்கப்பட்ட மக்களின் இரத்தவியர்வையை உறிஞ்சியுள்ளதென்பதை உணர்வர், சுதந்திர நாடுகளின் சகோரத்துவத்தை ஏற்படுத்தும் பொருட்டு இரத்தத்தை சிந்திசெய்யப்பட்ட தியாகத்தை அவர்கள் நினைவு கூறுவார்கள் எனறு அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

வட்டு-வீரபத்திர சிவன் கோவில் ஆனிஉததர உற்சவங்கள் 25-ம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 4-ம், 5- திகதி தேர். தீர்த்த வைபவங்களுடன் முடிவடையும்.

## மக்காரியோஸ்

நிக்கோஸியா, ஜூன் 20

சைப்பிரஸ் அதிபர் ஆர்ச்பிஷப் மக்காரிஸ் ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டில் கலந்துகொள்ளும் முன்னர் கெய்ரோ சென்று அதிபர் நாஸரைச் சந்திப்பார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல் வீதி 68-ம் இலக்கத்தி லுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ஆசிரியர் சங்க சகாய நிதி

யாழ்ப்பாணம், திங்கள்

வடமாகாண ஆசிரியர் சங்க சகாய நிதியின் ஐந்தாவது வருடாந்தக் கூட்டம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் திரு. சி. வைரமுத்து தலைமையில் நடைபெற்றது. வருடாந்த அறிக்கை வரவு செலவுக் கணக்கு ஆகியவை சபையால் ஏற்கப்பட்டு பின்னர் புது வருடத்திற்கு பின்வரும் உத்தியோகத்தர்கள் மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சி. வைரமுத்து, உபதலைவர்: ஏ. ஆர். ஆர். ராஜநாயகம், காரியதரிசி: எஸ். மகேஸ்வர ஐயர், உபகாரியதரிசி: வி. மகாதேவன் தனாதிகாரி சி. விசுவநாதன்.

நிர்வாகசபை அங்கத்தவர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: ம. சபாலிங்கம், வி. இளையதம்பி, வி. கார்த்திகேசு, கே. நல்லதம்பி, கே. வேலுப்பிள்ளை, கே. ராஜரத்தினம், கே. வைரமுத்து, கே. முத்துக்குமாரசாமி.

## மக்கள் சுகாதார வாரம்

பம்பலப்பிட்டி, திங்கள்

இன்று மக்கள் சுகாதார வாரம் ஆரம்பமாகின்றது. இதனை முன்னிட்டு நாட்டின் பல பகுதிகளிலும் மக்களுக்கு சுகாதார சீவியத்தின் நன்மை குறித்து விளக்கும் கலை நிகழ்ச்சிகளும் உரை அரங்குகளும் நடத்த ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன

## தூத்துக்குடி கப்பல் புறப்பட்டது

கொழும்பு, ஞாயிறு

கொழும்புக்கும் தூத்துக்குடிக்குமிடையேயான கப்பல் போக்குவரத்து இன்றுகாலை ஆரம்பமானது மந்திரி சுகததாஸ இந்த போக்குவரத்தை துவக்கிவைத்தார். இந்திய ஹைகமிஷனர் திரு. பீமசேனசச்சார் நிகழ்ச்சியில் பங்குபற்றிக்கொண்டார்.

## புயலுக்கு 37 பேர் பலி

லண்டன், ஜூன் 20

தென்கிழக்கு பொர்மோஸாவில் வீசிய புயலினால் 37 பேர் மாண்டதாகவும் 4000-க்கும் அதிகமான வீடுகள் முற்றாகச் சேதமடைந்துவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கிழக்கு போர்மோஸாவில் துறைமுகங்களுக்கும் பலத்த சேதமேற்பட்டுள்ளது

## 40 கொரில்லாக்கள் மாண்டனர்

சைகோன், ஜூன் 20

தென்வியட்நாமில் டானுங் விமானத்தளத்திலிருந்து ஆறு மைல் தூரத்தில் அமெரிக்க விமானங்கள் நடத்திய தாக்குதலில் 40 கொரிலாக்கள் மாண்டனர். அமெரிக்க விமானங்கள் மிகவும் தாளப் பறந்து இத்தாக்குதலை நடத்தினவாம்.

## வீடு தேவை

"ஈழநாடு" பத்திரிகையில் வேலை பார்க்கும் ஒருவருக்கு குடும்பத்துடன் வசிக்க தனி வளவுடன் சிறிய வீடு, அல்லது வீட்டில் ஒரு பகுதி தேவை. ஈழநாட்டிலிருந்து அதிகதூரத்திலில்லாமல் இயன்றளவு கிட்டத்தில் இருப்பது நல்லது. நல்ல வீடு பார்த்துத் தருபவர்களுக்கு ரூபா 25 சன்மானம் வழங்கப்படும்.

முருகையா,
அறை இல. 89,
எஸ். ஆர். எஸ். பில்டிங்,
[illegible]
யாழ்ப்பாணம்.

545

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

னாலே அவ்வளவு ஆபத்துக்களுக்கெல்லாம், கப்பித்தாவத்தை விநாயகர் கோவிலும், சிவன் கோவிலும் தப்பின. இந்தக் குருக்களின் தம்பியார்தான், மாணிக்கத்துறை கோவிலில் கலக காலத்தில் உயிர்த்தியாகம் செய்தவர். இப்பேர்ப்பட்ட ஒரு தியாக, வீர குடும்பத்தைச் சேர்ந்த குருக்களை, மகாநாட்டில் கௌரவித்தது மிகப் பொருத்தமாகும்.

* * *

தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி திறந்தவெளி அரங்கில் சென்ற ஞாயிறன்று, மாவை குருக்கள் குடும்பத்தைச் சேர்ந்த 10 வயது சிறுவனின் மிருதங்க அரங்கேற்றம் சிறப்பாக நடந்தது, சிறப்புக்கு முக்கிய காரணம், மகாராஜபுரம் சந்தானம் அவர்கள், அவ்விழாவுக்குத் தலைமை வகித்ததுடன் அங்கு கச்சேரி செய்ததும் தான்.

ஆலத்தூர் சகோதரர்கள் சிறுவயதில் முதல் முதலாக அரங்கேறியபோது அக்காலத்தில் பிரபல மிருதங்க வித்வான் புதுக்கோட்டை தக்ஷிணாமூர்த்திபிள்ளை மிகப் பெருந்தன்மையுடன் பக்க வாத்தியம் வாசித்து இளம் பாடகர்களுக்கு உற்சாகமூட்டி ஆர்ப்பரித்தார். அதனால் அப்பாடகர்களின் பேரும் புகழும் வளர்ந்தோங்கியது. "மாவை மணி" மிருதங்கம் வாசிக்க வித்வான் சந்தானம் அவர்கள் பெருந்தன்மையுடன் பாட முன்வந்ததைக் கண்டதும் அந்தப் பழைய கதை ஞாபகம் வந்தது. வாழ்க 'மாவை மணி'யும் அவரது கலையும்!

* * *

குருக்கள் குலத்தில் உதித்த ஒரு சிறுவன் மிருதங்கம் வாசிக்கலாமா என்று ஒரு கேள்வி எழுந்ததாம். அதே மேடையில் பேசிய ஓர் அன்பர் கயிலாயத்தில் நந்தி மத்தளம் கொட்டுவதாயும், மிருதங்கம் மங்களமான வாத்தியங்களில் ஒன்றென்றும் கோவில் திருவிழாவில் குருக்கள் முதலில் மிருதங்கத்தை அடிப்பதற்க்கு கொடுப்பரென்றும் மந்திர ஆதாரங்களைக் கூறி அந்த சந்தேகத்துக்குச் சரியான விடையளித்தார், எல்லாக் கலைகளும் புனிதமானவை. இறைவனுக்கு அர்ப்பணமாகும் 64 கலைகளிலும் உயர்வு தாழ்வேது?

* * *

பற்றூர் புரமெரித்தாயென்றேன் நானே பசுபதீ பண்டரங்கா என்றேன் நானே, கற்றூர்கள் நாவினுளாயென்றேன் நானே கடுவிடையொன் றூர்தியாயென்றேன் நானே, பற்றூர் வெஞ்சுளாயென்றேநானே பார்த்தற்கருள் செய்தாயென்றேன் நானே, அற்றூர்க்கருள் செய்யும் ஐயாறன்னேயென்றென்றே நானரற்றி நைகின்றேனே,

—அப்பர் சுவாமிகள்

## பிறமதங்களை . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

னர்கள். மற்ற மதத்தைச்சேர்ந்தவர்களுக்கு உள்ள பயத்தைப் போக்குவது எமது பொறுப்பாகும். ஆகையினாற்றான் எமது பிரதமர் டட்லி சேனநாயக்கா மற்ற மதத்தைச்சேர்ந்தவர்களின் உரிமைகளை நாம் பறிக்கமாட்டோம் என்று பொது அறிக்கை மூலம் கூறியிருக்கின்றார். இற்றைக்கு 75 ஆண்டுகளுக்கு முன்பு இப்படியான மகாநாடு ஒன்று அமெரிக்காவில் நடைபெற்றது. அம்மகாநாட்டிற்கு இந்தியாவில் இருந்து சுவாமி விவேகானந்தரும் இலங்கையில் இருந்து அனகாரிக தர்மபாலாவும் சென்றிருந்தனர். சமயத்தின் மூலம் நாட்டிலே அன்பை நாம்போதிக்கவேண்டும். கல்வி மூலமும் பிரச்சார மூலமும் நாட்டிலே சர்வமத ஒற்றுமையை ஏற்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

## "தங்களைத் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்மக்கள் தமிழரசுக்கட்சியை ஆதரித்ததன்மூலம்தெரிவித்துவிட்டார்கள்.

ஒற்றையாட்சி திட்டத்தில் எந்த நன்மையையும் பெற விரும்பினாலும் நாம் பிறருடைய தயவையும் கருணையையுமே எதிர்பார்க்க வேண்டியிருக்கின்றது. அதிகாரத்திலிருக்கும் அமைச்சர்களும், பிறரும் தருவதையே ஏற்கின்ற நிலையில்தான் ஒற்றையாட்சியில் என்றும் இருக்கும் உரிமைகளுக்குஇருக்கின்ற இந்தநிலைமையை மாற்றியமைத்து, நம்மை நாமே ஆளுகின்ற ஒருநிலைமையை, சிங்கள மக்களுடன் ஆட்சியில் சமமாக வாழுகின்ற ஒருநிலையை தமிழினத்திற்குதரததக்க அரசியல்முறையை இணைப்பாட்சிதானென்பதை எவரும்மறுக்க முடியாது, எனவே இணைப்பாட்சியை பெறும்முறையில், அரசியல் வாழ்வையும் போக்கையும் நாம்அமைத்துக்கொள்ளவேண்டும்.

வட்டுக்கோட்டை எம். பி, திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசும்போது, தமிழ்மக்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு செய்த தியாகமே இன்றுஅவர்களுக்கு சிங்கள மக்களிடையே ஒருமதிப்பை ஏற்படுத்தியுள்ளதென்றும், இந்த மதிப்பைக் கெடுத்து தமிழர்களிடையே பிளவை உண்டாக்கி, நாம் பெறும் உரிமைகளைக் குழப்புவதற்குச்சிலர் பாடுபட்டு வருகின்றார்களென்றும் கூறினார்,

மூதூர் எம். பி. திரு. முகமத் அலி, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் மற்றும் பலர் பேசினர்.

## கிறிஸ்தவ கல்லூரியில் வள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், திங்கள்

"அற்ப ஒரு பொருளைக் கொண்டு பெரிய ஒரு இலட்சியத்தைப் போதிப்பவனே பெரும் புலவனாவான் இக்கூற்றுக்கு அமைய நாம் ஆராய்வோமேயானால் உவமை சொட்டுதெவிட்டாத தீந்தமிழ்க் குறள்மூலம் அருங்கருத்தைச் சொல்லி விளங்கவைத்தபெருமை வள்ளுவனுக்கே உரியது"

இவ்வாறு வித்துவான் திரு. வேந்தனார் அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற வள்ளுவர் விழாவில் கூறினார். அவர் மேலும் கூறியதாவது. மயிர் தலையில் இருக்கும்வரை நாம் பேணி அலங்கரிக்கின்றோம் அம்மயிர் தலையைவிட்டு இழிந்தவழி அதைத் தூரத்தே வீசுகின்றோம் இவ்வண்ணமே ஒருவர் ஒழுக்கநெறியில் இருக்கும்வரை புகழ்பூசை பெறுவர் நெறிதவறி மக்களால் புறக்கணியில் தள்ளப்படுவர் உண்மையை எல்லோரும் நன்கறிய தமது குறள் மூலம் வைத்த பெருமையே அவன் புலமைக்கு ஓர் எடுத்துககாட்டு.

## சனியா? உப்புத்தான் காரணமாம்

லண்டன், ஜூன் 21

சனி பிடிப்பதற்கு உப்புதான் காரணம் என்று இந்திய டாக்டர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்,

அடிக்கடி சனியால் அவதியுற்ற இரண்டு குழந்தைகளுக்கும் இரண்டு பெரியார்களுக்கும் உப்பில்லாத பத்தியம் வைத்ததில் முழுக்குணம் ஏற்பட்டதாம். ஆறுமாதம் முதல் 14 மாதம்வரை சனியே பிடிக்கவில்லை என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால் குழந்தைகளுக்கு உப்புபண்டம் கொடுத்து சனி உபாதை ஏற்படச் செய்யலாம் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

## புயலுக்கு 8 பேர் பலி

டோக்கியோ, ஜூன் 21

தெற்கு ஜப்பானில் நேற்று வீசிய புயலினால் 8 பேர் மாண்டனர். வெள்ளத்தினால் 30,000 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org